1979 பிப்ரவரி 14]

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்:) 21 வட்டங்கள் 'மேற்கு மலைத் தொடர் பகுதி' எனக் குறிப்பிடப்படுகின்றன. அவை – நீலகிரி மாவட்டத்தில் கூடலூர்' கூனூர், கோயம்புத்தூர் மாவட்டத்தில் அவிஞசி, பொள்ளாச்சி, தாராபுரம், உடுமலைப்பேட்டை, மதுரை மாவட்டத்தில் பழனி, கோடைக்கானல், திண்டுக்கல், பெரியகுளம், உசிலம்பட்டி, உத்தமபாளையம், திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரநயினார் கோவில், தென்காசி, செங்கோட்டை, அம்பாசமுத்திரம், நாங்குனேரி, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிப்புத்தூர், சாத்தூர், கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறை, பூதப் பாண்டி ஆகியவை அடங்கும். மேற்கு மலைத் தொடர் வளர்ச்சிப் பணித் திட்டங்கள் இங்கெல்லாம் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மத்திய கூட்டுறவு வங்கிப் பணியாளர்கள்

* வினா எண் 42—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிக்கும் மற்ற மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும் இடையில் COMMON CADRE POSTS உண்டாக்க ஏதேனும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அந்தத் தகுதிக்கு நேரடியாக தேர்ந் தெடுக்கப்படுவார்களா? அல்லது தற்சமயம் வங்கிகளில் பணி புரிபவர்களுக்குக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

(அ) ஆம், அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இதை அரசு ஆய்ந்து வருகிறது.

திரு. செ. இராமலிங்கம் : வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிற இந்த நேரத்தில் அந்த 'காமன் கேடர் போஸ்ட்' களை உடனடியாக நிரப்ப அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : விரைவில் அது விரைவுபடுத்தப்படும்.